International Truth
& Justice Project
Sri Lanka

## அனைத்துலக உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் (ITJP) சிறிலங்கா

ஊடக அறிக்கை: 2015 இல் பாலியல் வன்முறைக்கும் சித்திரவதைக்கும் உள்ளாகி தப்பியவர்கள்: மௌனிக்கப்பட்டவர்.கள்.

**7 ஜனவரி 2016**

ஜொகனஸ்பேர்க்: அடிப்படையான தூய்மையாக்கலை வாக்குறுதியளித்த புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த ஒரு வருடத்தின் பின்பும் சிறிலங்கா பாதுகாப்புபடையினரால் பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதற்கான புதிய ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. "சிறிலங்காவின் பெயர் போன "வெள்ளை வான்கள்" கவலையளிக்கும் விதமாக இன்றும் செயற்பட்டு வருகின்றன. இது ஒரு வழமையான தொழில் போல நடைபெற்று வருகிறது. அரச அடக்குமுறை இயந்திரத்தை இல்லாதொழிக்கக் கூடிய வகையில் பாதுகாப்புப் பகுதியில் சீர்திருத்தங்கள் அவசரமாக மேற்கொள்ளப்படவில்லை என்றால் பொறுப்புக்கூறல் என்பது சாத்தியமாகாது என்பதை இது வெளிப்படுத்துகிறது." என்கிறார் ITJP ஐ சேர்ந்த ஜஸ்மின் சூகா.

2015ம் ஆண்டில் இலங்கை இராணுவம் மற்றும் காவல் துறையினரால் தடுத்துவைக்கப்பட்டிருந்த போது மோசமானதும் தொடர்ச்சியானதுமான சித்திரவதைக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்ட **இருபது** தமிழர்கள் நான்கு வெவ்வேறு நாடுகளிலிருந்து விபரமான சாட்சியங்களை வழங்கியுள்ளனர். இந்த சாட்சிகள் பற்றிய விபரங்கள் அவர்களது பாதுகாப்பு கருதியும் சிறிலங்காவில் உள்ள அவர்களது உறவினர்களின் பாதுகாப்பு கருதியும் மறைவாக வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் 2015ம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான பழிவாங்கல்களுக்கு ஆளாகி உள்ளனர்.

புதிய அரசாங்கம் பதவியிலிருக்கும் காலத்தில் சிறிலங்கா பாதுகாப்பு படையின் உறுப்பினர்களால் ஆண்களும் பெண்களும் பாலியல் வல்லுறவுக்கும் சித்திரவதைக்கும் உள்ளளாக்கப்பட்டது பற்றிய தெளிவான விபரிப்புக்களை ITJP யின் அறிக்கை வழங்குகிறது. ITJP யின் முன்னைய அறிக்கைகளில் சித்திரவதைக் கூடமாக அடையாளப்படுத்தப்பட்ட வவுனியா யோசப் முகாம் உட்பட அடையாளப்படுத்தப்பட்ட மற்றும் இரகசியமான இடங்களில் இந்த துஸ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ITJP அறிய வந்த மிக அண்மைக்கால 'வெள்ளை வான் கடத்தலும்' சித்திரவதையும் பாலியல் வன்செயல்களும் நிகழ்ந்த சம்பவம் 2015 டிசெம்பர் ஆகும்.

ITJP யின்படி, பல தமிழ் அரசியல்வாதிகளும், சர்வதேச செஞ்சிலுவை சங்கமும் இலங்கையில் உள்ள பல வெளிநாட்டு தூதுவர்களும் தொடரும் மீறல்களை அறிந்தே உள்ளனர். மேலும் இந்த அறிக்கை சித்திரவதையையும் பாலியல் துன்புறுத்தல்களையும் உண்மையாகவே நிறுத்த விரும்பினால் மேற்படி சம்பவங்களை உடனடியாக விசாரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டிய நடைமுறைகளையும் முன்வைக்கிறது. மேலும் இவ்வறிக்கை LTTE யுடன் நேரடியாக தொடர்புபட்டவர்கள் நாடு திரும்புவதில் எதிர்நோக்கக்கூடிய ஆபத்துக்களை முன்னிட்டு அவர்களையும் எச்சரிக்கிறது.

2015ம் ஆண்டு ஜெனிவா தீர்மானத்துக்கு அமைவாக பொறுப்புக்கூறல் விடயம் தொடர்பில் சிறிலங்கா அரசாங்கம் உண்மையான ஈடுபாடுகொண்டிருந்தால் மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு பகுதி சீர்திருத்தம், சட்டச் சீர்திருத்தம், செயற்திறனுள்ள சாட்சிய பாதுகாப்பு செயற்திட்டம் ஆகியவற்றின் அவசியத்தையும் மேற்படி ITJP யின் அறிக்கை கோடிட்டு காட்டுகிறது.

"தொடர்ச்சியான ஒடுக்குமுறையும் சகிக்கமுடியாதன்மையும் நிலவும் சூழலில் உண்மை அறியும் ஆணைக்குழு ஒன்றின் முன் பாதுகாப்பாக சாட்சியம் பகர்வது போரில் எஞ்சியவர்களுக்கு எவ்வளவு கடினமானது என்பதை காணமுடிகிறது. ஒரு வருடம் ஆகிவிட்ட நிலையில் அவசரமாக அர்த்தமுள்ள செற்பாட்டில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட வேண்டிய காலம் வந்துவிட்டது" என்கிறார் ஜஸ்மின் சூகா.

(முழுமையான அறிக்கையை பெற www.itjpsl.com ஊடாக தொடர்புகளுக்க itjpsl@gmail.com.